**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 9/2014**
**Deposition of Witness for : PW 36**

| | | |
|---|---|---|
| **Name** | **:** | திரு. சிவசாமி |
| **Father Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22-12-2022.**

முதல் விசாரணை -

நான் காவல் துறையில் பணிபுரிந்து இறுதியாக திண்டுகல் மாவட்டத்தில் கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றேன். 2013ம் ஆண்டு நான் திருவண்ணாமலை கிராமிய உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்த போது 12.1.2009 அன்று தானிப்பாடி உதவி ஆய்வாளர் புருஷோத்தமன் என்பவரிடம் அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று தானிப்பாடி காவல் நிலைய குற்ற எண் 30/2009 சட்டப்பிரிவுகள் 302,உ/இ 328 மற்றும் 41(ரு) ஐஐ கூஞீ ருஉவன் படி வழக்கு பதிவு செய்து அந்த அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கையை செங்கம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிக் கொண்டார். அந்த அச்சிட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.34. போன் மூலம் கிடைத்த தகவலின் பேரில் நான் தானிப்பாடி காவல் நிலையம் சென்று வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். இந்த வழக்கில் விஷச்சாராயம் சம்மந்தப்பட்டதால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் நான் புலனாய்வு செய்ய சென்றேன். மேலும் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் எனக்கு உதவியாக ஆய்வாளர் சாந்தலிங்கம் கிழக்கு காவல் நிலையம், அனைத்து மகளீர் காவல் நிலைய ஆய்வாளர் ராணி, ஆகியோர்களை புலனாய்வுக்குழுவை அமைத்தார். 13.1.2009 காலை 6 மணிக்கு இந்த வழக்கில் இறந்த ஜெயராமன் வீட்டிற்கு சென்று அங்கு சாட்சிகள் கோவிந்தன், சத்தியநாராயணன் ஆகியோர் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்தின் வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் அ.சா.ஆ. 35. அன்றே காலை 7 மணிக்கு இறந்து போன ஜெயராமன் வீட்டின் பின்புறம் இருந்த இரண்டு காலி சாராய பாக்கெட்டுகளை

மகஜர் மூலம் அ.சா.ஆ. 3 ஆக கைப்பற்றினேன். அந்த காலி சாராய பாக்கெட்டுகள் சா. பொ.7 வரிசை ( 2 எண்ணிக்கை) ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள், பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்த ஜெயராமன் த/பெ. முத்துகிருஷ்ணன் மீது பிரேத விசாரணை அறிக்கை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.36. பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் திரு. அன்பழகன் மூலம் தானிப்பாடி அரசு மருத்துவமனைக்கு கோரிக்கை கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். மேலும் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் குப்பு பாய் (எ) சுவாலியம்மாள் பிரேதத்தை பிரேத விசாரணை செய்ய வேட்டவலம் காவல் ஆய்வாளர் திரு. முகமது அபியுல்லா அவர்களை நியமித்தேன். திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர் சாந்தலிங்கம் அவர்களை இறந்து போன கோபாலசாமி என்பவர் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்ய வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். 13.1.2009 காலை 11 மணிக்குபோந்தை கிராமம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பக்கத்தில் இறந்த கோபால்சாமி என்பவர் சாராயம் விற்றதாக சொல்லும் இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் அல்லிமுத்து, செல்வம் முன்னிலையில் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 37. வரைபடம் அ.சா.ஆ 38. மேலும் இறந்து போன குப்பு பாய் (எ) சுவாலியம்மாள் போந்தை சின்னதண்டாவில் அரசமரத்தடியில் கிடந்த சாராய பாக்கெட்டை எடுத்து குடித்ததாக விசாரணையில் தெரியவந்த இடத்தை சாட்சிகள் பிரகாஷ், சக்தி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 39, மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 40. 13.1.2009 அன்று மாலை 5 மணிக்கு எதிரி மண்ணு த/பெ. கன்னன் என்பவரை தோட்டத்து பக்கத்தில் வைத்து கைது செய்தேன். அப்போது அவர் சாட்சிகள் ராஜேந்திரன், முருகன் ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அவர் வீட்டில் இருந்து சாராய பாக்கெட்டுக்களை எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் மூலம் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விஷசாராயம் 10 பாக்கெட் சா.பொ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே நாள் 19 மணிக்கு குப்பன் என்பவரை அவரின் வீட்டின் பின்னால் வைத்து கைது செய்தேன். அப்போது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜேந்திரன் முருகன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.

41. பின்னர் எதிரி குப்பன் தன் வீட்டில் வைத்திருந்த ரப்பர் டியூபில் 25 லிட்டர் சாராயத்தை மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரிக்கு இரண்டு 500 மி.லி பாட்டிலில் எடுத்துக் கொண்டு மீதம் உள்ளதை அழிக்கும் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. அந்த அழிக்கும் மகஜர் அ.சா.ஆ.10 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு 500 மி.லிட்டர் சாராய மாதிரி ஏற்கனவே சா.பொ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றே 21.00 மணிக்கு எதிரி ரவி என்பவரை அவருடைய வீட்டின் அருகில் வைத்து கைது செய்து விசாரணை செய்தோம். அப்போது அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜேந்திரன், முருகன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் எதிரி மறைத்து வைத்திருந்த சாராயம் கடத்த பயன்படுத்திய ஹீரோ பேந்தர் என்ற இரு சக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் மறைத்து வைத்திருந்த லாரி டியூப் மூலம் வைத்திருந்த 75 லிட்டர் சாராயத்தை இரண்டு 500 மி.லி. பாட்டிலில் மாதிரிக்கு எடுத்துக் கொண்டேன். அந்த மகஜர் அந்த இரண்டு 500 மி.லி. பாட்டில் சா.பொ. 5 மற்றும் 6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட இரண்டு சக்கர வாகனம் சா.பொ. 9, சாட்சிகள் பலராமன், ராஜேஷ், சாந்தா, ஜெயபால், ஏழுமலை, ஜானகி, கன்னியம்மாள், சின்னபாப்பா, கோவிந்தன், சத்தியநாராயணன், ஏழுமலை த/பெ. கோபால்சாமி, ஏழுமலை த/பெ. நாராயணன் கவுண்டர், ரங்கநாதன், நாராயணன், மாணிக்கம் அல்லிமுத்து, செல்வம், சென்னம்மாள், ரகு, போஜி, ஏழுமலை த/பெ. பூண்டி, ராஜேந்திரன், பிரகாஷ், சக்தி, ராஜேந்திரன் வி.ஏ.,ஓ, ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் மண்ணு, குப்பன், ரவி ஆகியோரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அன்றே கோபால் த/பெ. குப்புசாமி மோத்தக்கல் என்பவர் திருவண்ணாமலைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லும் போது வழியில் இறந்து விட்டார். அவரது பிரேதத்தை மோத்தக்கல் கிராமத்திற்கு எடுத்து சென்று அடக்கம் செய்து விட்டனர். அவர் விஷம் கலந்த சாராய பாக்கெட்டை குடித்து அதனால் உடல் நிலை பாதிக்கப்பட்டு இறந்திருக்கக்கூடும் என்று சந்தேகப்பட்டு இறந்தவரின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு மேற்படி பிரேதத்தினை தோண்டி எடுத்து பிரேத விசாரணை செய்ய தண்டராம்பட்டு வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பினேன். இது சம்மந்தமாக தண்டராம்பட்டு வட்டாட்சியர்

நீதித்துறை நடுவர் செங்கம் அவர்களுக்கு பிரேத விசாரணை அறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் அடங்கிய கோப்பை அனுப்பி வைத்துள்ளார். சேட்டு (எ) கோபால் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 43. தண்டராம்பட்டு வட்டாட்சியர் பிரேதம் தோண்டி எடுக்கப்பட்டதை சாட்சிகள் ஏழுமலை, பெருமாள், சின்னசாமி, கண்ணன், ஆறுமுகம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பெற்றுள்ளார். அவர்கள் முன்னிலையில் சவத்தை தோண்டி பிரேத விசாரணை மேற்கொண்ட அறிக்கை அ.சா.ஆ. 44. இறந்து போன கோபாலின் மனைவி பச்சையம்மாளிடம் வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த வாக்குமூலம் அ.சா.ஆ. 45 ( ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). 14.1.2009 தேதியன்று காலை 7 மணிக்கு செந்தில்குமார் (எ) ராமஜெயம் என்பவரை அவரது வீட்டிற்கு முன்னால் வைத்து கைது செய்தேன். அப்போது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை சாட்சிகள் ராஜேந்திரன், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்புதல் வாக்குமூலம் படி அவர் மறைத்து வைத்திருந்த சம்பவத்தன்று அனிந்திருந்த சட்டை மற்றும் லுங்கியை (சா.பொ. 1 மற்றும் 2) ஒரு கைப்பற்றுதல் மகஜர் (அ.சா.ஆ. 6) மூலம் கைப்பற்றினேன். பின்னை போந்தை அருவங்காடு பகுதியில் இருந்த பாழடைந்த பள்ளிக்கூடம் மற்றும் புதரில் இருந்து காலை 9 மணிக்கு எதிரி தன் சாராய பாக்கெட்டுகளில் கலக்க பயன்படுத்திய விஷமுடன் கூடிய மோனோபுரோட்டோபாஸ் என்ற டப்பாவை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 46. அந்த டப்பா சா.பொ. 10. பின்னர் போந்தை பெரியதண்டா ரோடில் உள்ள மாதாகோயில் பக்கம் மூன்று பாலிதீன் கவரில் விஷம் கலந்த தலா 200 மி.லி சாராயம் இருந்த மூன்று பாக்கெட்டுகளை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் அவரது உதவியாளர் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் 47. 3 விஷம் கலந்த சாராய பாக்கெட் சா.பொ. 11. எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிக் கொண்டேன். இவ்வழக்கில் தோலா (எ) போட்டியா என்பவர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் 13.1.2009 இரவு 23.24 மணிக்க சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கிடைத்த தகவலின் பேரில் மேற்படி பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொள்ள காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி வேட்டவலம் காவல் ஆய்வாளர் முகமது பபுவுல்லா அவர்களை அனுப்பி வைத்தேன். தோலா என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ. 32 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. பின்னர் சேட்டு (எ) கோபால் போந்தை கோவர்தன் என்பவரின் சிமெண்ட் களத்தில் இருந்த சாராய பாக்கெட்டுகள் இருந்ததாக சொன்ன இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் கோவிந்தன் மற்றும் ஹரிஹரன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா. ஆ. 48, வரைபடம் அ.சா.ஆ. 49. மேலும் சாட்சிகள் சின்னதாய், பச்சையம்மாள், முருகன், கோவிந்தசாமி, ஏழுமலை (எ) தனியா, துரைவேல், சரவணன், ராஜேந்திரன், முருகன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி செந்தில்குமாரை கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். 15.1.2009ந் தேதியன்று காலை 7 மணிக்கு எதிரி முருகேசன் என்பவரை கல்நாட்டு புதூர் மாரியம்மன் கோயில் அருகில் வைத்து கைது செய்தேன். அப்போது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராமச்சந்திரன், துர்கா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் அவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிக் கொண்டேன். மேலும் அதே நாள் 17 மணிக்கு தோலா என்பவர் சாராயம் குடித்த இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பிரகாஷ், சக்தி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா. ஆ. 50, மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 51. சாட்சிகள் ராமச்சந்திரன், செல்வம், வெங்கியம்மாள், பவுனம்மாள், மூர்த்தி, செல்வி, ஏழுமலை த/பெ. ராஜி. பிரகாஷ், சக்தி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சேகரித்து வைத்திருந்த இறந்தவர்களின் உடல் உறுப்புகளையும் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் தடயவியல் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பி வைக்க செங்கம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். எதிரி ரவியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 75 லிட்டர் சாராயத்தை மாதிரிக்கு 2 பாட்டி 500 மி.லி வீதம் எடுத்துக் கொண்டு மீதம் உள்ள சாராயத்தை அதே இடத்தில் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் அழிக்கும் மகஜர் மூலம் அழித்தேன். அந்த அழிக்கும் மகஜர் அ.சா.ஆ. 52. அதன் பின்னிட்டு நான் மாறுதலில் சென்று விட்டபடியால் எனக்கு பின்னால் வந்த காவல் துணை கண்காணிப்பாளர் சேகர் என்பவரிடம் வழக்கு கோப்பை அவரிடம் ஒப்படைத்துவிட்டேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

முதல் தகவல் அறிக்கையில் எதிரிகள் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 12.1. 2009 பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 13.1.2009 காலை 7.30 மணிக்கு உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது

என்றால் சரிதான். என்னுடைய பெயரை விசாரணை அதிகாரியாக குறிப்பிட்டு தான் முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கும் மற்ற ஆய்வாளர்களுக்கும் காவல் துறை கண்காணிப்பாளர் விசாரணை மேற்கொள்ள உத்தரவு பிறப்பித்த ஆணையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய கோப்பில் உள்ளது. 12.1.2009 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பின்னிட்டு ஆலோசனை செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. போந்தை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலரும், அவருடைய சிப்பந்தியும் பணியில் இருந்தார் என்றால் சரிதான். அவர் இந்த வழக்கு சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. அவர் அ.சா.1 ஆக அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அவர் 12.1.2009லேயே சம்பவ இடத்தை அனைத்தையும் காட்டியதாக விசாரணையில் கூறியுள்ளார் என்றால் அது தவறாகும். எதிரி மண்ணுவை 13.1.2009ல் மாலை 7 மணிக்கு அவருடைய தோட்டத்தின் அருகே கைது செய்துள்ளேன். அவரை கைது செய்வதற்கு முன்பாக நான் விசாரித்த சாட்சிகளில் எதிரி மண்ணு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவே, அல்லது கண்ணுற்றதாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி மண்ணு எந்த தெருவில் குடியிருக்கிறார் என்ற தெரு குறிப்பிடப்படவில்லை. என்றால் மண்ணுவை அவருடைய தோட்டத்தில் வைத்து கைது செய்தேன். எதிரி மண்ணுவை நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றும், அவர் எந்த பொருளும் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி படித்து பார்த்ததாகவோ, அவருக்கு படித்து காட்டியதாகவோ குறிப்பு இல்லை. ஆனால் படித்து காண்பிக்கப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் என்னால் சொல்லப்பட்டு தலைமை காவலர் இதயத்துல்லாகான் என்பவரால் எழுதப்பட்டது. மகஜர் நான் சொல்லச்சொல்ல தயார் செய்யப்பட்டது. அவரை அது குறித்து சாட்சியாக விசாரித்து இவ்வழக்கில் சேர்க்கவில்லை. எதிரி குப்பன் எந்த தெருவில் எந்த வீட்டில் குடியிருக்கிறார் என்றால் மேற்கு தெரு அவர் வீட்டின் முன்பு கைது செய்தேன். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் என் வீட்டில் உள்ள சாராய மூட்டையை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று கூறியிருக்கிறார் என்றால் சரிதான். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி படித்து பார்த்ததாகவோ, அவருக்கு படித்து காட்டியதாகவோ குறிப்பு இல்லை. ஆனால் நான் படித்து காண்பித்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னுடைய கையெழுத்து, சாட்சிகள் கையெழுத்து கடைசியாக எதிரியின் கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இரண்டு மகஜர்களையும்

எழுதிய மேற்சொன்ன தலைமை காவலர் 790 என்று சொன்னால் நான் சொல்லச் சொல்ல அவர் எழுதினார். அ.சா.ஆ. 9ல் கடைசி 4 வரிகள் பின்னிட்ட சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி ரவி எந்த தெருவில், எந்த வீட்டில் குடியிருக்கிறார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவருடைய வாக்குமூலத்தை அவருக்கு படித்து காட்டியதாகவோ, படித்து பார்த்ததாகவோ, குறிப்பு இல்லை என்றால் சரிதான். அவருடைய கையெழுத்து என்னுடைய மற்றும் சாட்சிகள் கையெழுத்திற்கு கீழே போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவரிடம் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் இடம் இரவு 10.30 மணிக்கு தோட்டத்தில் கைப்பற்றப்பட்டதாகவும், அந்த இடத்தில் வெளிச்சம் இருந்ததாகவோ, விளக்கு இருந்ததாகவே குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த நிலத்தின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்பதை நிருபிக்க இருசக்கர வாகனத்தின் ஆர்.சி ஐ நான் வாங்கவில்லை. மேற்சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரை 790 தலைமை காவலர் எழுதியுள்ளார் அவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. மதுவிலக்கு சட்டத்தின் படி சாராயத்தை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி எந்த தெருவில், எந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்ற குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. மாரியம்மன் கோயில் தெரு என்று குறிப்பிட்டுள்ளேன். அவருடைய வாக்குமூலத்தை அவருக்கு படித்து காட்டியதாகவோ, படித்து பார்த்ததாகவோ, குறிப்பு இல்லை என்றால் சரிதான். அவருடைய கையெழுத்து என்னுடைய மற்றும் சாட்சிகள் கையெழுத்திற்கு கீழே போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்தவர் 790. மகஜர்களை வேறு தலைமைக் காவலர் தயார் செய்துள்ளார் என்றால் நான் சொல்லச் சொல்ல தயார் செய்துள்ளார். நான் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் மகஜரில் குற்றப்பிரிவுகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. 1 முதல் 4 எதிரிகளிடம் இருந்து கைப்பற்றியதாக சொல்லும் பொருட்களை சீல் வைக்கவில்லை என்றால் சரியல்ல. மேனோ பிரோட்டாகாஸ் சாதாரண மருந்து கடையில் கிடைக்கும் என்றால் சரிதான். 5ம் எதிரி எந்த தெருவில், எந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்ற குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. அவரை வீட்டில் வைத்து கைது செய்யவில்லை. அவருடைய வாக்குமூலத்தை அவருக்கு படித்து காட்டியதாகவோ, படித்து பார்த்ததாகவோ, குறிப்பு இல்லை என்றால் சரிதான். அவருடைய கையெழுத்து என்னுடைய மற்றும் சாட்சிகள் கையெழுத்திற்கு கீழே போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் படித்து காண்பிக்கப்பட்டது. இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்த தலைமைக் காவலரை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை நான் சொல்லும் இடத்தில கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் தாமாக முன் வந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், தாமாக என்னால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்து என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஜெயராமன் தானிப்பாடி மருத்துவர் சௌந்தர்ராஜனை நான் விசாரிக்கவில்லை என்றால் நான் மாற்றலாகி சென்று விட்டேன். அவருக்கு சிகிச்சை அளித்த விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.44ல் சாட்சிகள் வட்டாட்சியரிடம் தங்களுக்கு யார் மீதும் சந்தேகம் கிடையாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் எந்த தவறும் செய்வில்லை என்றும், அதன் பேரில் நான் சொன்ன நேரத்தில் அவர்களை கைது் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை -</u>**

மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் எனக்கு புலன் விசாரணை செய்ய கொடுத்த உத்தரவு உண்மை நகல் அ.சா.ஆ. 53.

**<u>மறு குறுக்கு விசாரணை -</u>**

அவ்வாறு உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், வழக்கிற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஓம்/- சிவசாமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.